


dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com

காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 276 | 4 Pages | 4.5.2025 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 276 | 4 பக்கங்கள் | 4.5.2025 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**உள்ளத்தால் உள்ளலுந் தீதே பிறன்பொருளைக்**
**கள்ளத்தால் கள்வே மெனல்**

**விளக்கம்:**

குற்றமானதைஉள்ளத்தால்எண்ணுவதும்குற்றமே,அதானால் பிறன் பொருளை அவன் அறியாதப் வகையால் வஞ்சித்துக்கொள்வோம் என்று எண்ணாதிருக்க வேண்டும்.

## காசா: 16 பேர், நிவாரண உதவி பொருட்களுடன் சென்ற கப்பல் மீது வெடிகுண்டு தாக்குதல்




காசா நகரம், மே.4

காசா பகுதியில், ஓராண்டை கடந்து இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் 46 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் உயிரிழந்து உள்ளனர். லட்சக்கணக்கானோர் காயமடைந்து உள்ளனர். இதனை காசா சுகாதார அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். இந்நிலையில், காசாவில் உள்ள மக்களுக்கு நிவாரண உதவிக்கான பொருட்களை வழங்குவதற்காக 16 பேருடன் கப்பல் ஒன்று சென்றுள்ளது. அதனை மனித உரிமைகள் குழுவினர் இயக்கினர். இந்நிலையில், மால்டா கடற்கரை பகுதியில் நேற்று அந்த கப்பல் மீது வெடிகுண்டு தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதனால் கப்பலில் தீ பிடித்து கொண்டது. தீ மளமளவென மற்ற பகுதிகளுக்கும் பரவியது. கப்பல் நீரில் மூழ்கும் நிலைக்கு தள்ளப்பட்டது.

உடனே கப்பலில் இருந்தவர்கள் சார்பில் அவசரகால அபாய அழைப்பு விடப்பட்டது. இதனை தொடர்ந்து, மற்றொரு கப்பல் விரைவாக வந்து, தீப்பிடித்த கப்பலில் இருந்தவர்களை மீட்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. கப்பலின் தீயும் அணைக்கப்பட்டது. 16 பேரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். இதனை மால்டா அரசு தெரிவித்து உள்ளது. எனினும் தாக்குதல் நடந்ததற்கான காரணம் பற்றி எதுவும் தெரியவரவில்லை. கப்பலை அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர். அந்த கப்பல், மத்திய தரைக்கடலில் சர்வதேச கடல்பரப்பில் உள்ளது.

துனிசியாவில் இருந்து இந்த வார தொடக்கத்தில் புறப்பட்ட கப்பலானது, இஸ்ரேலின் தடையை சவாலாக எடுத்து கொண்டு நிவாரண பொருட்களை வழங்குவதற்காக சென்றபோது இந்த விபத்து ஏற்பட்டு உள்ளது. காசா செல்லும்முன் மால்டாவில் 40 பேரை ஏற்றி செல்வது என முடிவாகி இருந்தது. அவர்களில் சுவீடன் நாட்டின் ஆர்வலர் கிரேட்டர் தன்பெர்க்கும் அடங்குவார்.

## அமெரிக்காவில் புயல்: 900 விமானங்கள் ரத்து



வாஷிங்டன், மே.4

அமெரிக்காவில் உருவான புயலால்அங்குகனமழைபெய்யும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்திருந்தது. அதன்படி கென்டகி, டல்லாஸ் உள்ளிட்ட பல மாகாணங்களை புயல்பந்தாடியது. இதனால் அங்கு பலத்த காற்றுடன்கூடிய கனமழை பெய்தது. அப்போது ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் ஏராளமானகார்கள் அடித்துச் செல்லப்பட்டன. மேலும் சாலையில் மரங்கள் முறிந்து விழுந்ததால் அங்கு போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது.

அதேபோல் புயல் கரையை கடந்தபோது மணிக்கு சுமார் 120 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசியது. அப்போது மோசமான வானிலை காரணமாக விமானம் தரையிறங்குவதில் சிக்கல் ஏற்பட்டது. எனவே பயணிகளின் பாதுகாப்பு கருதி சுமார் 900 விமானங்கள் ரத்துசெய்யப்பட்டன.

## எதிர்க்கட்சி எம்.பி. சுட்டுக்கொலை அதிர்ச்சி சம்பவம்



நைரோபி, மே.4

கென்யாவில் மத்திய வலது ஐக்கிய ஜனநாயக கூட்டணி ஆட்சி செய்து வருகிறது. மத்திய இடது ஆரஞ் ஜனநாயக முன்னணி அந்நாட்டின் எதிர்க்கட்சியாக செயல்பட்டு வருகிறது. அந்நாட்டின் எதிர்க்கட்சி எம்.பி. சார்லஸ் ஒங் அண்டு . இவர் கசிபல் தொகுதியில் போட்டியிட்டு எம்.பியாக வெற்றிபெற்றார். இந்நிலையில், சார்லஸ் கடந்த புதன்கிழமை காரில் தலைநகர் நைரோபியில் சென்றுகொண்டிருந்தார். அங்கு கோங்க் சாலையில் உள்ள சந்திப்பில் சிக்னலுக்காக காரில் காத்திருந்தார். அப்போது, பைக்கில் வந்த மர்ம நபர், காரில் இருந்த எம்.பி. சார்லஸ் மீது சரமாரியாக துப்பாக்கி சூடு நடத்தினார். இதில், எம்.பி. சார்லஸ் சம்பவ இடத்திலேயே காரிலேயே ரத்த வெள்ளத்தில் உயிரிழந்தார்.

தகவலறிந்து விரைந்து வந்த போலீசார், சார்லசின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், துப்பாக்கி சூடு நடத்திவிட்டு தப்பிச்சென்றது யார் என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். எதிர்க்கட்சி எம்.பி. சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் அந்நாட்டில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது

## பிலிப்பைன்ஸ்: அடுத்தடுத்த வாகனங்களில் மோதிய பஸ் 10 பேர் பலி

மணிலா, மே.4

பிலிப்பைன்ஸ் நாட்டின் சுபிக்கிளார்க்டார்லாக் நெடுஞ்சாலை மிகவும் பரபரப்பான சாலைகளில் ஒன்றாகும். இந்த சாலையில் பயணிகளை ஏற்றிக்கொண்டு பஸ் ஒன்று நேற்று சென்றுகொண்டிருந்தது. அப்போது கட்டுப்பாட்டை இழந்த பஸ்சானது சாலைகளில் உள்ள அடுத்தடுத்த வாகனங்களில் மோதி விபத்துக்குள்ளானது. இந்த கோர விபத்தில் எதிர்பாராதவிதமாக 10 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 30க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இது குறித்து தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். விபத்தில் படுகாயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். போலீசாரின் முதற்கட்ட விசாரணையில் பஸ் டிரைவர் வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது தூங்கியதாக கூறப்படுகிறது. மேலும் விபத்து தொடர்பாக பிலிப்பைன்ஸ் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# அமைச்சர்கள் இனி சென்னையில் இருப்பதைவிடவும் மாவட்டங்களில் அதிக நாட்களைச் செலவிடுங்கள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுரை

சென்னை, மே.4

சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் தி.மு.க மாவட்டச் செயலாளர்கள் கூட்டம், கழக தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று (03.05.2025) நடைபெற்றது. கழக பொதுச்செயலாளர் துரைமுருகன், கழக பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு மற்றும் கழக துணைப் பொதுச் செயலாளர்கள் கனிமொழி, ஆ.ராசா உள்ளிட்டோர் கலந்துக்கொண்டனர்.

இக்கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆற்றிய உரை பின் வருமாறு : –

நம்முடைய பலமே, நம்முடைய கழகக் கட்டுமானம்தான்! இத்தகைய நிர்வாகக் கட்டமைப்பு எந்தக் கட்சிக்கும் கிடையாது. அந்த கட்டமைப்பை காலம் தோறும் புதுப்பித்துக் கொண்டே இருக்கிறோம்; இருக்க வேண்டும்.

பா.ஜ.க. தமிழ்நாட்டில் எப்படியாவது காலூன்ற நினைக்கிறது. அதற்கு அனைத்து விதமான அச்சுறுத்தலையும் செய்து அ.தி.மு.க.வை அடக்கி விட்டது. பழனிசாமிக்கும் வேறு வழியில்லை. பா.ஜ.க. கூட்டணியை ஏற்றுக் கொள்ளாவிட்டால் சொந்தக் கட்சியில் அவர் தலைமைக்கே சிக்கல் வரும் என்று பயப்படுகிறார். அதனால் பா.ஜ.க. கூட்டணியை ஏற்றுக்கொண்டு விட்டார்.

நாம் எல்லாக் காலக்கட்டத்திலும் இதுபோன்ற சோதனைகளை எதிர்கொண்ட இயக்கம் தான். அரசியல் ரீதியாக நம்மை வெல்ல முடியாதவர்கள், இது போன்ற மிரட்டல்கள் மூலமாக அசிங்கப்படுத்த நினைப்பார்கள். அவர்களது அரட்டல் – மிரட்டல் – உருட்டல் அனைத்துக்கும் உண்மையான காரணம் என்ன என்பது மக்களுக்குத் தெரியும். எனவே, பா.ஜ.க.வின் அச்சுறுத்தலை, அரசியல் ரீதியாக நாம் எதிர்கொள்வோம்.



அமைச்சர்கள் அந்தந்த மாவட்டத்தில் இருந்து பகுதிகளில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அமைச்சர்கள் இனி சென்னையில் இருப்பதைவிடவும் மாவட்டங்களில் அதிக நாட்களைச் செலவிடுங்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொரு ஊராட்சி, வார்டு வாரியாகச் செல்ல வேண்டும்.

வேட்பாளர் யார் என்பதை தலைமைக் கழகம் முடிவு செய்யும். வெற்றி பெறுபவரே வேட்பாளராக நிறுத்தப்படுவார். திறமை வாய்ந்தவர் நிறுத்தப்படுவார். அவரை சட்டமன்றத்துக்கு தகுதியுள்ளவராக தேர்வு செய்ய உழைக்க வேண்டியது உங்களது கடமை!

பவள விழாவைக் கொண்டாடிய கழகம், ஆறாவது முறையாக ஆட்சியில் அமர்ந்திருக்கக் காரணம், கோடிக்கணக்கான திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள்தான் என்பதை நான் அனைத்து இடங்களிலும் சொல்லி வருகிறேன்.


கடந்த ஏழு ஆண்டுகளாக நாம் எதிர்கொண்ட அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றியை பெற்று வருகிறோம். இந்த வெற்றிக்குக் காரணம், கழக நிர்வாகிகளும், தொண்டர்களும்தான். இத்தகைய நன்றி உணர்வோடுதான் நாம் செயல்பட்டு வருகிறோம்." எனத் தெரிவித்துள்ளார்.

## ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோவிலில் நம்பெருமாள் கோடை திருநாள் தொடக்கம்

ஸ்ரீரங்கம், மே.4

ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோவிலில் ஆண்டுதோறும் சித்திரை மாதம் நம்பெருமாள் கோடை திருநாள் (பூச்சாற்று உற்சவம்) வெளிக்கோடை, உள்கோடை என தலா 5 நாட்கள் வீதம் 10 நாட்கள் நடைபெறும். அதன்படி இந்த ஆண்டுக்கான விழா நேற்று மாலை தொடங்கியது.

இதையொட்டி மாலை 6 மணி அளவில் உற்சவர் நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு இரவு 7 மணிக்கு வெளிக்கோடை நாலுகால் மண்டபத்திற்கு வந்து சேர்ந்தார். அங்கு புஷ்பம் சாத்துப்படி கண்டருளினார். பின்னர் அங்கிருந்து இரவு 8.30 மணிக்கு புறப்பட்டு இரவு 9 மணிக்கு மூலஸ்தானம் சென்றடைந்தார். இந்த பூச்சாற்று உற்சவத்தை ஏராளமான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.



நம்பெருமாள் உள்கோடை திருநாள் வருகிற 7 ந்தேதி தொடங்கி 11 ந்தேதி வரை 5 நாட்கள் நடைபெறுகிறது. 7ந்தேதி முதல் 10ந்தேதி வரை வீணை ஏகாந்த சேவையும் நடைபெறுகிறது. 6ந்தேதி ஸ்ரீராமநவமியையொட்டி மதியம் 1.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை நம்பெருமாள் சேரகுலவள்ளி தாயார் சேர்த்தி சேவை நடைபெற உள்ளது. 12ந்தேதி சித்ரா பவுணர்மி அன்று கஜேந்திரமோட்ச புறப்பாடு நடைபெறுகிறது. அன்று மாலை 6.15 மணி முதல் 6.45 மணிக்குள் ஸ்ரீரங்கம் அம்மாமண்டபம் காவிரி ஆற்று படித்துறையில் நம்பெருமாள் கஜேந்திரமோட்சம் கண்டருளும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. விழாவிற்கான ஏற்பாடுகளை கோவில் இணை ஆணையர் சிவராம்குமார் மற்றும் கோவில் அதிகாரிகள், ஊழியர்கள் செய்து வருகின்றனர்.

## உயர்மட்டக்குழு உறுப்பினர் பொறுப்பு வேண்டாம்: தே.மு.தி.க.வில் இருந்து விலகுவதாக நல்லதம்பி மிரட்டல்

சென்னை, மே.4

தே.மு.தி.க. இளைஞரணி செயலாளராக முன்னாள் எழும்பூர் தொகுதி எம்.எல்.ஏ. நல்லதம்பி இருந்து வந்தார். கடந்த மாதம் 30ந்தேதி தர்மபுரி மாவட்டம் பாலக்கோட்டில் நடைபெற்ற தே.மு.தி.க. தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டத்தில், அவரிடம் இருந்து அந்தப் பதவி பறிக்கப்பட்டு, விஜயகாந்தின் மூத்த மகன் விஜய பிரபாகரன் வசம் ஒப்படைக்கப்பட்டது. அதற்கு பதிலாக நல்லதம்பிக்கு கட்சியில் உயர்மட்டக்குழு உறுப்பினர் பொறுப்பு வழங்கப்பட்டது.



இதனால், அதிருப்தி அடைந்த நல்லதம்பி, கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த்துக்கு கடிதம் ஒன்று எழுதியுள்ளார். அதில், உயர்மட்டக் குழு உறுப்பினர் பொறுப்பில் இருந்து தன்னை விடுவிக்க வேண்டும் என்றும், பொறுப்பில் இருந்து விடுவிக்காத பட்சத்தில் கட்சியில் இருந்து விலகிக்கொள்வேன் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பிரேமலதா விஜயகாந்த்துக்கு நல்லதம்பி எழுதியுள்ள கடிதத்தின் முழு விவரம் வருமாறு:

தே.மு.தி.க. பொதுச் செயலாளருக்கு ஒரு தொண்டனின் கடிதம். ஒட்டுமொத்த தமிழக மக்களின் நெஞ்சங்களில் எல்லாம் சிம்மாசனமிட்டு அமர்ந்து கொண்டிருக்கும் எங்களின் குடும்பத் தலைவர் கேப்டன் விஜயகாந்தை வணங்கி தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்துக்கு வணக்கத்துடன் எழுதிக் கொள்வது. கு.நல்லதம்பி, கட்சியின் உண்மை விசுவாசி ஆகிய நான் கட்சித் தலைவர் கேப்டனால் உருவாக்கப்பட்டவன். நான் என்றென்றும் கேப்டனுக்கும், கேப்டனுடைய குடும்பத்தாருக்கும் தே.மு.தி.க.வுக்கும் என்றும் நன்றியுடனும் விசுவாசத்துடனும் இருப்பேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

விஜய பிரபாகரன் குரல் சட்டசபையில் ஒலிக்க வேண்டும் நான் மன்றத்திலும், கட்சியிலும் என்னால் முடித்தவரை கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்கு மேல் சிறப்பான முறையில் தங்களிடம் கெட்ட பெயர் வாங்காமல் இயக்கத்திற்காகவும் கேப்டனின் குடும்பத்திற்காகவும் என்னால் முடிந்த வரை செயல்பட்டு வருகிறேன். மேலும் தருமபுரியில் நடந்து முடிந்த பொதுக்குழுவில் நாமெல்லாம் நீண்ட நாள் எதிர்பார்த்த தெய்வத்திரு கேப்டனின் மறு உருவமும் கேப்டனின் நிழலாகவும் இருக்கின்ற இளைய கேப்டன் விஜய பிரபாகரனுக்கு கட்சி இளைஞரணி செய்லாளராக அறிவித்தமைக்கு என்னுடைய உளமாற வாழ்த்துக்களை மனதார தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் தம்பியின் குரல் தமிழக சட்டப் பேரவையில் கழகத் தலைவர் கேப்டனின் குரலாக ஒலிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வாழ்த்தி மகிழ்கிறேன்.

அண்ணி பிரேமலதா அவர்களின் கவனத்திற்கு அறிந்தோ அறியாமலோ நான் ஏதாவது தவறு செய்திருந்தால் என்னை மன்னித்து விடுங்கள். இயக்கத்தில் இருந்து என்னை விடுவித்தாலும் என்றுமே நான் தங்களுடைய பிள்ளை. என்றைக்கும் நான் கட்சியின் கடைகோடி தொண்டன் என்பதை என் உதிரத்தின் ஒவ்வொரு துளியும் சொல்லும் என்பதை தங்களுக்கு தெரிவித்துக்கொண்டு கட்சியின்பொதுச்செயலாளர்பிரேமலதாவுக்கும், பொருளாளர் எல்.கே.சுதீஷூக்கும் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுச் செயலாளர் பிரேமலதா கடந்த 30.4.2025 அன்று வெளியிட்ட அறிவிப்பில் எனக்கு கட்சியின் உயர்மட்ட குழு உறுப்பினர் பதவி வழங்கப்பட்டுள்ளது. இப்பொறுப்பில் இருந்து என்னை விடுவிக்குமாறு தங்களை மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அப்படி விடுவிக்காத பட்சத்தில் நான் கட்சியில் இருந்து விலகிக்கொள்வேன் என்று தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். இதனை நான் எந்தவித மன வருத்தத்திலும் கூறவில்லை மன மகிழ்ச்சியோடுதான் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

உங்கள் செய்திகள் நிகழ்ச்சிகள்
தினக்கனியில் வர வேண்டுமா
தொடர்புக்கு:9443699066

WHATSAPP CHENEL

DHINAKANI.COM

## கத்தரிக்காய் பழ அழுகலை கட்டுப்படுத்தும் எளிய வழி குறித்து குறித்து பிஜிபி வேளாண் கல்லூரி மாணவிகள் செயல்விளக்கம்

நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் வட்டாரம்,திப்பக்காப்பட்டி கிராமம், கத்தரிக்காய் விவசாயி ஒருவர் பழங்கள் அழுகுவதை கண்டறிந்தார். அவர் கிராமப்புற அனுபவத்தில் உள்ள வேளாண் மாணவிகளிடம் இதற்கான தீர்வு குறித்து கேட்டார். இதனை கட்டுப்படுத்த வேளாண் மாணவிகள் இயற்கை முறையில் சோற்று கற்றாழை கரைசலை தயாரித்து இந்நோயை கட்டுப்படுத்தலாம் என செயல் விளக்கமளித்தனர்.



# தஞ்சாவூரில் காய்ந்த நுங்கு ஓடுகளால் ஆபத்து; விபத்து ஏற்படும் வாய்ப்புள்ளதால் வாகன ஓட்டிகள் அச்சம்



தஞ்சாவூர், மே.4

தஞ்சாவூரில் சாலையோரம் நுங்கு கூடுகள் சிதறி கிடப்பதால் விபத்து அபாயம் ஏற்பட்டுள்ளது. சாலையோரம் நுங்கு ஓடுகள் கொட்டப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வாகன ஓட்டிகள் வலியுறுத்தியுள்ளனர். கோடை வெயிலின் தாக்கம் காரணமாக தஞ்சாவூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் நுங்கு, இளநீர் விற்பனை படுஜோராக நடைபெற்று வருகிறது.

சாலையோரங்களிலும், முக்கிய வீதிகளிலும் தற்காலிகமாக கடைகள் அமைத்து நுங்கு, இளநீர், கரும்புச்சாறு, தர்பூசணி பழங்கள் போன்றவை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதற்காக தஞ்சாவூர் மட்டுமின்றி வெளிமாவட்டங்களில் இருந்தும் இளநீர் மற்றும் நுங்குகள் இறக்குமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. பொதுவாக நுங்கு விற்பனை செய்யும் வியாபாரிகள் நுங்கு சுளையை மட்டும் எடுத்து விட்டு, நுங்கு கூடுகளை சாலையோரம் ஆங்காங்கேவீசிவிடுகிறார்கள்.

இதனால் தஞ்சையில் உள்ள பல இடங்களில் நுங்கு மற்றும் இளநீர் கூடுகள் சாலையோரம் சிதறி கிடக்கிறது. தஞ்சையில் இருந்து பட்டுக்கோட்டை செல்லும் வழித்தடத்தில் தொம்பன்குடிசை மேம்பாலம் இறங்கும் இடத்தில் சாலையோரம் நுங்கு கூடுகள் கொட்டப்பட்டுள்ளன.

மேலும், சில வியாபாரிகள் நுங்கு கூடுகளை மூட்டைகளாக கட்டி போட்டுச் செல்கின்றனர். இந்த நுங்கு கூடுகளை ஆடு, மாடுகள் கிளறி சாலைக்கு கொண்டு வந்து விடுகின்றன. இதனால் இருசக்கர வாகனங்களில் செல்வோர் சறுக்கி விழும் அபாயம் உள்ளது.

பகல் நேரத்தில் வாகன ஓட்டிகள் எச்சரிக்கையுடன்சென்றுவிடுகின்றனர். ஆனால் இரவு நேரங்களில் வாகன ஓட்டிகள் விபத்தில் சிக்கிக்கொள்ள அதிக வாய்ப்பு உள்ளது. மேலும், கோடை வெயிலின் காரணமாக காய்ந்த நுங்கு கூடுகளால் தீவிபத்து ஏற்படும் சூழலும் நிலவுகிறது.

இதனால் வாகன ஓட்டிகள் அச்சத்துடனேயே சென்று வருகின்றனர். எனவே, அசம்பாவிதம் எதுவும் ஏற்படும் முன்பு சாலையோரம் கிடக்கும் நுங்கு கூடுகளை அகற்ற வேண்டும். சாலையோரங்கள் குப்பைகள் மற்றும் நுங்கு கூடுகளை கொட்டிச்செல்பவர்கள் மீது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வாகன ஓட்டிகள் கோரி க்கை வைத்துள்ளனர்.

# வில்லியனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை சமுதாய நலவழி மையமாக மேம்படுத்த வேண்டும்; கிராம சபை கூட்டத்தில் தீர்மானம்



புதுச்சேரி, மே.4

புதுச்சேரி மாநிலம் முழுவதும் நேற்று முன்தினம் மே தின சிறப்பு கிராம சபை கூட்டம் உள்ளாட்சி துறை சார்பில் அனைத்து கிராமங்களிலும் நடைபெற்றது. இதன் ஒரு பகுதியாக, வில்லியனூரில் ஆணையர் ரமேஷ் தலைமையில் கிராம சபை கூட்டம் நடந்தது.

இதில் உதவி பொறியாளர்ஹெலன், வில்லியனூர் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள், அனைத்து துறை பொறியாளர்கள் மற்றும் கிராம மக்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில், வில்லியனூர் புறவழிச்சாலை வழியாக பேருந்துகள் செல்கின்றன. அனைத்து பேருந்துகளும் வில்லியனூர் நகரம் வழியாக செல்ல வேண்டும். அதற்கு ஆணையர் நடவடிக்கை எடுக்க வேண்டும். வில்லியனூர் எம்ஜிஆர் சிலையில் இருந்து தட்டாஞ்சாவடி வரை செல்லும் சாலைக்கு குறுக்கே பல்வேறு இடங்களில் சென்டர்மீடியன் விளக்கப்பட்டு கிராசிங் செய்யப்பட்டுள்ளது.

இதன்காரணமாக வெளியூரில் இருந்து வரும் பேருந்துகள் விபத்துக்குள்ளாகிறது. அதனை குறைக்க வேண்டும். மேலும் அதில் ரிப்லேட்டர் பொருத்த வேண்டும். இதேபோன்று பேருந்துகள் கிராம நகர பகுதிக்குள் வந்து செல்ல ஏதுவாக போக்குவரத்து துறையினர் சாலையோர கடைகளை ஒழுங்குபடுத்த வேண்டும்.

வில்லியனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை சமுதாய நலவழி மையமாக மேம்படுத்தி, அதிக படுக்கை வசதி, எக்ஸ்ரே, இசிஜி உள்ளிட்ட வசதிகளை செய்து தர வேண்டும். வில்லியனூர் பகுதியில் உள்ள பிரசித்தி பெற்ற கோயில்கள் மற்றும் மாதா கோயில் உள்ளது. இதன் காரணமாக அவ்வப்போது ஆன்மீக மற்றும் பொது நிகழ்ச்சிகளில் பொதுமக்கள் அதிகமாக கலந்து கொள்கின்றனர்.

அவர்களுக்கு போதுமான கழிப்பிட வசதி இல்லை. இதற்காக பஞ்சாயத்து சார்பில் நடமாடும் கழிப்பிட வசதி ஏற்படுத்தி தர வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. மேலும், வில்லியனூர் கிராம சபை கூட்டத்தில் அனைத்து துறைகளை சேர்ந்த அதிகாரிகளும் கலந்து கொண்ட நிலையில் மின்துறை மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் கலந்து கொள்ளாதது பொதுமக்களுக்கு ஏமாற்றத்தை அளித்தது. இதுகுறித்து பொதுமக்கள் சார்பில் கவனஈர்ப்பு கொண்டு வரப்பட்டது.

இதேபோல், கரியமாணிக்கம் பகுதியில் நடந்த கிராம சபை கூட்டத்தில் ஆணையர் ரமேஷ் கலந்து கொண்டு பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார். கரியமாணிக்கத்தில் பிரதான சாலையில் பேருந்து செல்ல குறுகிய சாலை இருப்பதாகவும், காலை நேரங்களில் பள்ளி பேருந்துகள் கல்லூரி பேருந்துகள் செல்லும் போது தினமும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது, அதனை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பேருந்து நிலையத்தை மேம்படுத்த வேண்டும். இலவம்பஞ்சு மரங்களை அகற்ற வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. மேலும் சில இடங்களில் குடிநீர் பிரச்னை மற்றும் கழிவுநீர் வாய்க்கால் சுத்தப்படுத்தவும் கோரிக்கை வைக்கப்பட்டது.

# பாட்டவயல் சோதனைச்சாவடியில் பிளாஸ்டிக் தடுப்பு நடவடிக்கை; வாகன சோதனைகள் தீவிரம்



பந்தலூர், மே.4

பந்தலூர் அருகே பாட்டவயல் சோதனைச்சாவடியில் பிளாஸ்டிக் தடுப்பு நடவடிக்கையாக கேரளாவில் இருந்து வரும் வாகனங்களை நிறுத்தி பணியாளர்கள் சோதனையில் ஈடுபட்டனர். நீலகிரி மாவட்டம், பந்தலூர் அருகே பாட்டவயல் சோதனைச்சாவடி வழியாக கேரளா மாநிலம் வயநாடு மாவட்டங்களில் இருந்து ஏராளமான வாகனங்கள் சுற்றுலாவுக்காகவும் பிற பணிகளுக்காகவும் வந்து செல்கின்றனர்.

அவ்வாறு வரும் வாகனங்களில் தடை செய்யப்பட்டுள்ள பிளாஸ்டிக் தண்ணீர் பாட்டில்கள், கேரி பேக்குகள் உள்ளிட்டவைகளை எடுத்து வந்து தமிழக பகுதிகளில் சாலையோரங்களிலும், தேயிலை தோட்டங்கள், நீர் நிலைகள், சுற்றுலா தலங்களில் வீசி எறிவதால் சுற்றுச்சூழல் பாதிப்புகள் ஏற்படுகின்றது.

அதனால் மாவட்ட நிர்வாகம் சார்பில் எல்லைப்பகுதியில் உள்ள சோதனைச்சாவடிகளில் கேரளாவில் இருந்து வரும் வாகனங்களை நிறுத்தி வாகன சோதனை மேற்கொண்டனர். பந்தலூர் அருகே பாட்டவயல் சோதனைச்சாவடியில் கேரளாவில் இருந்து வரும் வாகனங்களை நிறுத்தி பணியில் இருக்கும் ஊழியர்கள் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.

# மருத்துவ தாவர ஆராய்ச்சி மையத்தில் அங்கன்வாடி பணியாளர்களுக்கு ஊட்டச்சத்து விழிப்புணர்வு நிகழ்ச்சி



ஊட்டி, மே.4

ஊட்டி அருகே எமரால்டில் உள்ள மருத்துவ தாவர ஆராய்ச்சி மையத்தில் அங்கன்வாடி பணியாளர்களுக்கான ஊட்டச்சத்து குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

ஊட்டி அருகே எமரால்டில் உள்ள மருத்துவ தாவர ஆராய்ச்சி மையத்தில் அங்கன்வாடி பணியாளர்களுக்கு ஊட்டச்சத்து குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் வாழ்க்கை முறை சார்ந்த நல்வாழ்வு நடைமுறைகளை மேம்படுத்துவது, ஊட்டச்சத்து குறித்து நடைமுறை அறிவை மேம்படுத்துவதையும், உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி பாரம்பரிய உணவு முறைகளை ஏற்றுக்கொள்வதை ஊக்குவிப்பதையும் நோக்கமாக கொண்டு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

முன்னதாக, சஷிகாந்த் வரவேற்று போஷன் அபியானின் நோக்கங்களை விளக்கினார். குறிப்பாக குழந்தைகள் மற்றும் பெண்களிடையேஆரோக்கியமான உணவுப்பழக்கங்களை வடிவமைப்பதில் அங்கன்வாடி ஆசிரியர்களின் முக்கிய பங்கு குறித்து எடுத்துரைத்தார்.

சமச்சீர் உணவுகளின் முக்கியத்துவம், பதப்படுத்தப்பட்ட உணவின் உடல்நல அபாயங்கள் மற்றும் பிராந்தியகுறிப்பிட்ட, பருவகாலஉணவுபொருட்களை தினசரி நுகர்வுக்குள் மீண்டும் அறிமுகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து விரிவான விளக்கக்காட்சி வழங்கப்பட்டது. பழங்கள், தானியங்கள் மற்றும் பருப்பு வகைகள் மற்றும் மூலிகைதேயிலை செடிகள் என பல்வேறு கருப்பொருள் பிரிவுகளின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட 44 தாவர இனங்களின் கண்காட்சி இருந்தது. உள்ளூரில் கிடைக்கும் பழங்கள் காட்சிப்படுத்தப்பட்டு அவற்றின் ஆரோக்கிய நன்மைகள் குறித்து தெரிவிக்கப்பட்டது.

மேலும் தானியங்கள் மற்றும் பருப்பு வகைகள் பிரிவில் பாரம்பரிய தானியங்களான எள், ராகி, ஓட்ஸ், குதிரைவாலி, பச்சை பயறு ஆகியவை ஊட்டச்சத்து குறைபாட்டைத் தடுப்பதிலும் நீடித்த ஆற்றலை ஊக்குவிப்பதிலும் முக்கிய பங்கு வகிப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பங்கேற்றவர்களுக்கு தினை, வெல்லம் மற்றும் பருப்பு வகைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட மூலிகை தேநீர் மற்றும் ஆரோக்கியமான சிற்றுண்டிகள் வழங்கப்பட்டது. வெல்லத்துடன் வேகவைத்த பருப்பு, எள் லட்டு ஆகியவை நிகழ்வின் கருப்பொருளுடன் இணைக்கப்பட்ட ஒரு சுவையான மற்றும் சத்தான அனுபவத்தை வழங்கின. மருத்துவ தாவர நாற்றுகளும் விநியோகிக்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் தாவரவியலாளர் அனகா முகேந்திரன், முரளி, கோபிநாத், கருணைதாசன், ஸ்ரீமதி. மணிமேகலை, கள உதவியாளர் மற்றும் இதர பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மதுபோதையில் போக்குவரத்து உதவி காவல் ஆய்வாளரைக் கல்லால் தலையில் தாக்கிய நபர் கைது



சென்னை, மே.4

சென்னை கிழக்கு கடற்கரை சாலை, அக்கரை சந்திப்பில் மதுபோதையில் போக்குவரத்து உதவி காவல் ஆய்வாளரைக் கல்லால் தலையில் தாக்கிய ரவி என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். கல்லால் தாக்கிவிட்டுத்தப்பியோட முயன்றபோது மற்றொருவரைப் போக்குவரத்து காவலர் அவர்களை விரட்டிப் பிடித்து நீலாங்கரை சட்டம் ஒழுங்கு போலீசாரிடம் ஒப்படைத்தார்.

# கோடை விடுமுறையை முழுமையாக வழங்க அங்கன்வாடி ஊழியர்கள் போராட்டம்



ஊட்டி, மே.4

மே மாதம் கோடை விடுமுறையை முழுமையாக வழங்கவலியுறுத்திஊட்டி கலெக்டர்அலுவலகவளாகத்தில் அங்கன்வாடி ஊழியர்கள் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். அங்கன்வாடி பணியாளர்களுக்கு மே மாதம் கோடை விடுமுறையை முழுமையாக வழங்கிட வேண்டும். நீலகிரி மாவட்டத்தில் காலியாக உள்ள அங்கன்வாடி ஊழியர்கள் காலிப்பணியிடங்களை முழுமையாக நிரப்பிட வேண்டும்.

பல்வேறு குளறுபடிகளை உருவாக்கும் டிஎச்ஆர்., திட்டத்தை திரும்ப பெற வேண்டும். மேலும், நீலகிரி மாவட்டத்தில் அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் உதவியாளர்களை பழிவாங்கும் நோக்கில் செயல்படும் மாவட்ட ஒருங்கிணைப்பாளரை கண்டித்து அங்கன்வாடி ஊழியர்கள் ஊட்டி பிங்கர் போஸ்ட் பகுதியில் உள்ள மாவட்ட கூடுதல் கலெக்டர் அலுவலக வளாகத்தில் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காத்திருப்பு போராட்டத்திற்கு அங்கன்வாடி பணியாளர்கள் சங்க மாவட்ட தலைவர்கவிதாதலைமை வகித்தார். செயலாளர் சசிகலா மற்றும் இணை செயலாளர் விஜயா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் சிஐடியு., மாவட்ட தலைவர் சங்கரலிங்கம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். போராட்டத்தின் போது, கோரிக்கைகளை வலியுறுத்தி அங்கன்வாடி பணியாளர்கள் கோஷங்களை எழுப்பினர்.இந்தபோராட்டத்தில் 100க்கும் மேற்பட்ட பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# கோவை காவலர் பயிற்சி பள்ளி மைதானத்தில் மாநகர ஊர்க்காவல் படைக்கு ஆள் சேர்க்கும் முகாம்



கோவை , மே.4

காவலர் பயிற்சி பள்ளி மைதானத்தில் மாநகர ஊர்க்காவல் படைக்கு ஆள் சேர்க்கும் முகாம் நடைபெற்றது. முகாமில் ஆர்வமுடன் 43 ஆண்கள், 10 பெண்கள் என மொத்தம் 53 பேர் கலந்து கொண்டனர். முகாமில் பங்கேற்றவர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பு, உயரம் மற்றும் எடை அளவீடு ஆகியன மேற்கொள்ளப்பட்டன. தேர்ந்தெடுக்கப்படும் நபர்கள், மாநகர காவல் துறையினருடன் இணைந்து பொதுமக்களின் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

# திருவாரூர் மாவட்டம் குடவாசலில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் அரசு கல்லூரி கட்டுமான பணி



திருவாரூர், மே.4

திருவாரூர் மாவட்டம் குடவாசலில், ரூ.15 கோடி மதிப்பீட்டில்நடைபெற்று வரும் அரசு கல்லூரி கட்டுமான பணிகளை விரைவாக முடிக்க கலெக்டர் உத்தரவிட்டார்.

திருவாரூர் மாவட்டம் குடவாசல் ஒன்றியத்தில் நேற்று அரசின் வளர்ச்சி திட்ட பணிகளை கலெக்டர் மோகனச்சந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதன்படி செல்லூர் என்ற இடத்தில் ரூ.15 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் அரசு கல்லூரிக்கான கட்டிட கட்டுமான பணியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தவுடன் பணியினை விரைவாகவும் உரிய தரத்துடனும் செய்து முடிக்குமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும் மனப்பறவை என்ற இடத்தில் கலைஞர் கனவு இல்லம் வீடு கட்டுமான பணி மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுநிதியிலிருந்து ரூ.6 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் ஈமசடங்கு மண்டபம் கட்டுமான பணி மற்றும் மேலப்பாளையூர் என்ற இடத்தில் ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ் ரூ.30 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி ஆகியவற்றினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும் ரூ 4 கோடி 73 லட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் பிரதம மந்திரி சாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் காவனூர் முதல் அடவங்குடி வரையிலான சாலை அமைக்கும் பணியினை ஆய்வு செய்தார்.

மேலும் காங்கேய நகரம் என்ற இடத்தில் கலைஞர் கனவு இல்லம் கட்டுமான பணிகள் மற்றும் அங்குள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ 7 லட்சத்து56 ஆயிரம் மதிப்பில் நடைபெற்று வரும் மதிய உணவு சமையல் கூடம் கட்டுமான பணி உள்ளிட்டவற்றை ஆய்வு செய்த கலெக்டர் மோகனச்சந்திரன் அனைத்து பணிகளையும் உரிய தரத்துடன் விரைவாக முடிக்க வேண்டும் என சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

# அம்மாபட்டினம் தவ்ஹீத் ஜமாஅத் சார்பில் மாணவ, மாணவிகளுக்கு கோடைகால நல்லொழுக்க பயிற்சி முகாம்: 14 நாட்கள் நடைபெறுகிறது



அறந்தாங்கி மே 4

புதுக்கோட்டை மாவட்டம் அம்மாபட்டினத்தில் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் கிளை1 சார்பாக கோடைகால நல்லொழுக்க பயிற்சி முகாம் தொடங்கியது.

தமிழக முழுவதும் பள்ளி மாணவர்களுக்கு பொதுத்தேர்வுகள் முடிந்த நிலையில் மே மாதம் முழுவதும் பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது. பெரும்பாலான பள்ளி மாணவர்கள் அதிக நேரம் செல்போனில் மூழ்கியுள்ளனர். இந்த நிலையில் பள்ளி மாணவர்களின் விடுமுறையை பயனுள்ளதாக கழிக்கவும், செல்போனுக்கு அடிமையாவதை தடுக்கவும், மாணவ மாணவிகளுக்கு நல்லொழுக்கத்தை போதிக்கவும் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் என்ற பேரியக்கம் சார்பில் தமிழகம் முழுவதும் நல்லொழுக்க பயிற்சி முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக அம்மாபட்டினம் கிளை1 தவ்ஹீத் ஜமாஅத் சார்பில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு கோடைகால நல்லொழுக்க பயிற்சி முகாம் தொடங்கியது.

மே 17 வரை தொடர்ந்து 14 நாட்கள் நடைபெறும் இந்த பயிற்சி வகுப்பில் இஸ்லாமிய கல்வி மற்றும் நல்லொழுக்க பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

அம்மாபட்டினத்தில் அர்ரஹ்மான் தவ்ஹீத் ஜமாஅத் பள்ளியில் நடைபெறும் இந்த வகுப்பில் புதுக்கோட்டை மாவட்ட தலைவர் சித்திக் ரகுமான், மாவட்ட பேச்சாளர் அப்துர்ரஹ்மான் ஆகியோர் ஆண்களுக்கு பயிற்சி அளிக்கின்றனர். பெண்களுக்கு தனியாக பெண் ஆலிமாக்களை கொண்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில் நூற்றுக்க ணக்கான பள்ளி மாணவ மாணவிகள் கலந்து கொண்டுள்ளனர்.

# தூத்துக்குடி: தாய் திட்டியதால் 7ம் வகுப்பு மாணவன் தூக்குப்போட்டு தற்கொலை

தூத்துக்குடி, மே.4

தூத்துக்குடி பூபாலராயர்புரம் 1வது தெருவைச் சேர்ந்தவர்சுரேஷ். இவருடைய மகன்ஜோவிசுவா(14 வயது). இவன் அப்பகுதியில் உள்ள பள்ளியில் 7ம் வகுப்பு படித்து வந்தான். தற்போது பள்ளிகளுக்கு கோடை விடுமுறை விடப்பட்டு உள்ளதால் வீட்டில் இருந்தான். இந்த நிலையில்நேற்றுமுன்தினம்மதியம்ஜோவிசுவாவுக்கும், அவனுடைய அண்ணனுக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. எனவே ஜோ விசுவாவை அவனது தாய் கண்டித்து திட்டியதாக கூறப்படுகிறது.

இதனால் மனமுடைந்த ஜோ விசுவா வீட்டின் பின்பக்க அறையில் திடீரென்று தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டான். இதுகுறித்து தூத்துக்குடி வடபாகம் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு சென்ற போலீசார் இறந்த ஜோ விசுவாவின் உடலைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். தூத்துக்குடியில் தாயார் திட்டியதால் 7ம் வகுப்பு மாணவன் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# கடற்கொள்ளையர்கள் தாக்குதல்; நாகை மீனவர்கள் வேலை நிறுத்தம் அறிவிப்பு

நாகை, மே.4

எல்லை தாண்டி மீன்பிடிப்பதாக கூறி தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்துவதும், அவர்களை கைது செய்வதும், அவர்களின் விசைப்படகுகளை பறிமுதல் செய்வதும் தொடர்கதையாகி விட்டது. இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசை தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

இந்நிலையில் இலங்கையை சேர்ந்த கடற்கொள்ளையர்கள் தற்போது தமிழக மீனவர்கள் மீது கொலைவெறி தாக்குதலை அரங்கேற்றி உள்ளனர். நாகையில் இருந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தி உள்ளதாக கூறப்படுகிறது.



ஒரே நாளில் 3 இடங்களில் கடற்கொள்ளையர்கள் தாக்கி உள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்கரைப்பேட்டை, செருதூர், வெள்ளப்பள்ளம் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளது. இலங்கை கடற்கொள்ளையர்களால் தாக்கப்பட்ட 20 மீனவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இரும்பு, கத்தி உள்ளிட்ட ஆயுதங்களை வைத்து கடற்கொள்ளையர்கள் கொடூரமாக தாக்கியதாக காயமடைந்த மீனவர்கள் வேதனை தெரிவித்துள்ளனர். இந்த தாக்குதலானது மீனவ மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்த நிலையில், மீனவர்கள் மீது கடற்கொள்ளையர்கள் நடத்திய தாக்குதலை கண்டித்து நாகை மாவட்டம் செருதூர், வெள்ளப்பள்ளம் மீனவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை அறிவித்துள்ளனர்.

# மணலி சின்னமாத்தூரில் குப்பைகளை எரிக்கும் ஆலையை ஆய்வு செய்ய பசுமை தீர்ப்பாயம் உத்தரவு




சென்னை, மே.4

சென்னையை அடுத்த மணலி சின்னமாத்தூரில் மாநகராட்சி சார்பில் அமைக்கப்பட்டுள்ள குப்பைகளை எரிக்கும் ஆலையில் இருந்து வெளியேறும் புகையால் அந்த பகுதி மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருவதாக புகார் எழுந்தது. குப்பை எரிக்கும் ஆலை அமைக்க மாநகராட்சி நிர்வாகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திடம் இருந்து எந்தவித அனுமதியும் பெறவில்லை என்றும் குற்றம் சாட்டப்பட்டது.

சென்னையில் உள்ள தென்மண்டல தேசிய பசுமை தீர்ப்பாயம், இது தொடர்பாக தாமாக முன்வந்து (சூமோட்டோ) வழக்காக எடுத்து விசாரித்து. பின்னர், மாநகராட்சி நிர்வாகம் விளக்கம் அளிக்க உத்தரவிட்டது. இந்த நிலையில் அந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது மாநகராட்சி சார்பில் ஆஜரான வக்கீல், 'இந்த ஆலை கடந்த ஓராண்டாக செயல்படவில்லை. இங்குள்ள பழுதான எந்திரங்களை சீரமைக்க டெண்டர் கோரப்பட்டுள்ளது. எந்திரங்களை சீரமைத்த பின்பு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திடம் உரிய அனுமதி பெறப்படும்' என தெரிவிக்கப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பாக மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அனுப்பிய நோட்டீசுக்கு மாநகராட்சி நிர்வாகம் பதிலளிக்காதது விசாரணையின் போது தெரியவந்தது. இதற்கு அதிருப்தி தெரிவித்த தீர்ப்பாயம், 'சுற்றுச்சூழலை பாதுகாப்பதன் அவசியத்தை மாநகராட்சி அதிகாரிகள் உணரவில்லை' என குற்றம்சாட்டியது. பின்னர் தீர்ப்பாயம் பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது:

மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் ஆலையை ஆய்வு செய்து, அது செயல்படுகிறதா? இல்லையா? என்பதை சரிபார்க்க வேண்டும். குப்பைகளை எரிக்கும் ஆலையை சீரமைப்பது தொடர்பான டெண்டர் இறுதி செய்யப்பட்டு, எப்போது பணிகள் முடிவடையும் என்பதையும், அதற்கான காலக்கெடுவையும் சென்னை மாநகராட்சி நிர்வாகம் தாக்கல் செய்ய வேண்டும்.

உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாட்டை சம்பந்தப்பட்ட செயலாளர்கள் மூலம் கண்காணிக்க வேண்டியது அரசின் பொறுப்பாகும். மாசுக்கட்டுப்பாட்டு வாரிய விதிமுறைகளுக்கு உட்பட்டு குப்பைகளை எரிக்கும் ஆலை செயல்படவும், இதற்காக அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலாளர் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை உயர்வு

நாமக்கல், மே.4

நாமக்கல் மண்டலத்தில் 1,100க்கும் மேற்பட்ட கோழிப்பண்ணைகள் உள்ளன. இங்கு 7 கோடிக்கும் மேற்பட்ட முட்டைக்கோழிகள் வளர்க்கப்படுகின்றன. அவற்றின் மூலம் தினசரி சுமார் 6 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் முட்டைகள், தமிழக அரசின் சத்துணவு திட்டத்திற்கும், வெளிநாட்டிற்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. மேலும் கேரளா, கர்நாடகா உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கும், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.



தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு தினசரி முட்டை கொள்முதல் விலையை நிர்ணயம் செய்து வருகிறது. கடந்த மாத தொடக்கம் முதலே முட்டையின் கொள்முதல் விலை சரிவடைந்த நிலையிலேயே இருந்த நிலையில், மாத இறுதியில் விலை சற்று அதிகரித்தது.

இந்த நிலையில், நாமக்கல்லில் முட்டை கொள்முதல் விலை இன்று சற்று அதிகரித்துள்ளது.

அதன்படி, நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை 10 காசுகள் உயர்ந்து ரூ.4.70 ஆக விலை நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

# தகவல் தொழில்நுட்பத்தில் காவல்துறை பின்தங்கியுள்ளது உயர் நீதிமன்றம் வேதனை

சென்னை, மே.4

சுற்றுலா அழைத்து செல்வதாக கூறி ரூ. 13 லட்சம் மோசடி செய்ததாக சென்னையை சேர்ந்த இருவர் மீது வேலூரை சேர்ந்த மனோகர்தாஸ் என்பவர் கோயம்பேடு காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தார். இந்த புகார் மீது மேல் நடவடிக்கை எடுக்கப்படாததால் மனோகர்தாஸ் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கின் விசாரணையின் போது இரண்டு மாதங்களில் இந்த வழக்கு தொடர்பான இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்படும் என காவல்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் உறுதியளித்தபடி எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த நிலையில் உயர்நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஜெகதீஸ் சந்திரா நீதிமன்றத்தின் உத்தரவுகளை பின்பற்றும் படி உரிய விதிகளை வகுக்க வேண்டும் எனவும், உத்தரவுகள் அமல்படுத்தப்படுவதை ஆன்லைன் முறையில் கண்காணிக்கப்படுவதாக கூறினாலும் கூட கள நிலவரங்கள் வேறாக இருப்பதால் ஒவ்வொரு முறையும் நீதிமன்றத்தின் கதவைதட்ட வேண்டியதாக இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். இந்த நிலையில் தமிழ்நாடு காவல்துறை, தகவல் மற்றும் தொழில்நுட்பத்தில் பின்தங்கி இருப்பதாக சென்னை உயர்நீதிமன்றம் வேதனை வேதனை தெரிவித்துள்ளது. மேலும் தமிழகத்தில் உள்ள விசாரணை அமைப்புகளை முழுமையாக டிஜிட்டல் மயமாக்குவதற்கான காலம் வந்துவிட்டது எனவும் தெரிவித்துள்ளது.

# குன்னூர் மேட்டுப்பாளையம் மலைப்பாதையில் விழுந்த ராட்சத மரம்; போக்குவரத்து பாதிப்பு



நீலகிரி, மே.4

தென்னிந்திய பகுதிகளின் மேல், வளிமண்டல கீழடுக்கு பகுதிகளில், கிழக்கு மற்றும் மேற்கு திசை காற்று சந்திக்கும் பகுதி நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் ஒரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. இந்நிலையில், நீலகிரி மாவட்டம் குன்னூரில் இன்று கனமழை பெய்தது. கனமழையுடன் பலத்த காற்றும் வீசியது. இதன் காரணமாக குன்னூர் மேட்டுப்பாளையம் மலைப்பாதையில் ராட்சத மரம் விழுந்தது.

இதனால், அப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. முறிந்து விழுந்த மரத்தை அகற்றும் பணியில் தீயணைப்புத்துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

# பெட்ரோல் ஏற்றி வந்த சரக்கு ரெயிலில் ஏற்பட்ட கசிவு... பெரும் அசம்பாவிதம் தவிர்ப்பு



மதுரை, மே.4

மதுரை மாவட்டம் சோழவந்தான் ரெயில் நிலையத்தில் பெட்ரோல் ஏற்றி வந்த சரக்கு ரெயிலில் திடீரென பெட்ரோல் கசிவு ஏற்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

முன்னதாக தருமபுரியில் இருந்து ஒரு டேங்கரில் 70 ஆயிரம் லிட்டர் பெட்ரோல் வீதம் 34 டேங்குகளில் பெட்ரோல் ஏற்றி கொண்டு சரக்கு ரெயில் ஒன்று கப்பலூர் தொழிற்பேட்டைக்கு சென்று கொண்டிருந்தது. இந்த நிலையில் சோழவந்தான் ரெயில் நிலையம் அருகே வந்தபோது, டேங்கில் இருந்து பெட்ரோல் கசிந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து சோழவந்தான் ரெயில் நிலையத்தில் சரக்கு ரெயில் நிறுத்தப்பட்டது. உடனடியாக சோழவந்தான் தீயணைப்புத்துறையினருக்கு தகவல் அளிக்கப்பட்டது.

மேலும், ஓஎன்ஜிசி பணியாளர்கள் வரவழைக்கப்பட்டு பெட்ரோல் கசிவு சரி செய்யப்பட்டது. அதிகாரிகள் முன்கூட்டியே கசிவை கண்டறிந்ததால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.

பின்னர் சுமார் 2 மணி நேரத்துக்கு பிறகு சரக்கு ரெயில் கப்பலூர் தொழிற்பேட்டைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதனால் ரெயில் போக்குவரத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டதாக ரெயில்வே துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தமிழ்நாடு அரசின் உயரிய கொள்கையான உடல் உறுப்பு தானத்தை விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இறந்த பின் மண்ணில் மக்கும் விலைமதிப்பில்லா உடல் உறுப்பு உறுப்புகளை தானத்திற்காக பதிவு



தமிழ்நாட்டின் தென் மாவட்டமான நெல்லையை சேர்ந்த சமூக சேவகர் ஜெயக்குமார் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு சமூக சேவைகளை செய்து வருகிறார்.

தமிழ்நாடு அரசின் உயரிய கொள்கையான உடல் உறுப்பு தானத்தை விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இறந்த பின் மண்ணில் மக்கும் விலை மதிப்பில்லாத உடல் உறுப்பு உறுப்புகளை தானத்திற்காக பதிவு செய்துள்ளார். மேலும் சமூக வலைதளம் மூலமாக 100க்கும் மேற்பட்ட உறவுகளை அரசு மருத்துவமனையில் உடல் உறுப்பு தானத்திற்காக பதிவு செய்துள்ளார்.

புற்று நோயாளிகளின் மறுவாழ்விற்கு மகிழ்ச்சியை மலர செய்யும் விதமாக தனது தொடர்பில் உள்ள 50க்கும் மேற்பட்ட நபர்கள் முடிதானம் செய்துள்ளனர்.

இதில் ஆண்கள் பலரும் தனது முடியை சரியான முறையில் வளர்த்து முடிதானம் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

புற்று நோயாளிகளின் தட்டணுக்கள் எண்ணிக்கையை அதிகரிக்கும் வரபிரசாதமாக அமைந்துள்ள இரத்த தட்டணுக்கள் தானத்தை திரு. ஜெயக்குமார் அவர்கள் மூன்று முறை வழங்கியுள்ளார். மேலும் இரத்த தட்டணுக்கள் தானத்தின் தேவை மற்றும் அவசரத்தை உணர்ந்து இதுவரை 50க்கும் மேற்பட்ட நபர்கள் தட்டணுக்கள் தானம் செய்துள்ளனர்.

இவரின் சிறந்த சேவையை பாராட்டி திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் குடியரசு தின விழா விருது மற்றும் பல சமூக விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சேலம்: எரிந்த நிலையில் பெண் சடலமாக மீட்பு



சேலம், மே.4

சேலம் மாவட்டம் கொண்டப்பநாயக்கன் பட்டி சரஸ்வதி நகர் பகுதியைச் சேர்ந்தவர் அன்னலட்சுமி (60 வயது). உடல்நலம் பாதிக்கப்பட்ட அவர் தனியாக வசித்து வந்தார். அவரது மகள் கலைச்செல்வி என்பவர் அவரை பராமரித்து வந்தார். தினமும் உணவு வழங்குவது, தூய்மை செய்வது உள்ளிட்ட பணிகளை செய்துவிட்டு கலைச்செல்வி அவரது இல்லத்திற்கு சென்று விடுவார்.


இந்த நிலையில் நேற்று இரவு வழக்கம்போல உணவு கொடுத்துவிட்டு கலைச்செல்வி சென்றுள்ளார். பின்னர் காலையில் வந்து பார்த்தபோது, அவரது தாய் தீயில் எரிந்து சடலமாக கிடந்துள்ளார். இதைக்கண்டு அதிர்ச்சி அடைந்த கலைச்செல்வி, இதுகுறித்து கன்னங்குறிச்சி போலீசாருக்கு தகவல் தெரிவித்துள்ளார்.

இந்த தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார் அன்னலட்சுமியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

உடல்நலம் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையாக இருந்த அன்னலட்சுமிக்கு மின்விசிறி உள்ளிட்டவைகளை ஆன் செய்வதற்கு வசதியாக அவருக்கு அருகில் சுவிட்ச் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் சுவிட்சை ஆன் செய்யும்போது மின்சாரம் தாக்கி தீப்பிடித்து உயிரிழந்தாரா? அல்லது கொலை செய்து எரிக்கப்பட்டாரா? என்ற கோணத்தில் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# திருவள்ளூர்: ஏலச்சீட்டு நடத்தி ரூ.78 லட்சம் மோசடி செய்த பெண் கைது






திருவள்ளூர், மே.4

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி அடுத்த சோழவரம் செம்புலிவரம் மேடு பகுதியைச் சேர்ந்தவர் பவானி (35 வயது) இவர், ஏலச்சீட்டு, தீபாவளி மற்றும் நகை பண்டு நடத்தி வந்தார். இவரிடம் பாபு என்பவர் ரூ.3 லட்சம் ஏலச்சீட்டு கட்டி வந்தார். ஆனால் தவணை காலம் முடிந்து ஏலச்சீட்டு செலுத்திய பணத்தை தராமல் பவானி ஏமாற்றியதாக கூறப்படுகிறது.

இதுபற்றி பாபு அளித்த புகாரின்பேரில் ஆவடி மத்திய குற்றப்பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்தனர். அதில் பவானி ஏலச்சீட்டு நடத்தி பாபு உள்பட 50க்கும் மேற்பட்டோரிடம் ரூ.78 லட்சத்துக்கும் மேல் மோசடி செய்தது தெரியவந்தது. மோசடியில் ஈடுபட்ட பவானியை போலீசார் கைதுசெய்து சிறையில் அடைத்தனர்.

# என்னை கொலை செய்ய சதி நடந்தது... மதுரை ஆதீனம் பரபரப்பு குற்றச்சாட்டு



சென்னை, மே.4

சென்னை காட்டாங்குளத்தூரில் உள்ள தனியார் பல்கலைக்கழக வளாகத்தில் 6வது அனைத்துலக சைவ சித்தாந்த மாநாடு இன்று தொடங்கி 3ம் தேதி வரை நடைபெற உள்ளது. இந்த மாநாடு மதுரை ஆதீனத்தின் சார்பில் நடத்தப்படுகிறது.

இந்த மாநாட்டில் கலந்துகொள்ள பிரதமர் மோடி, பல்வேறு மாநில கவர்னர்கள், முதல்மந்திரிகள், நீதிபதிகள், சிவாச்சாரியர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்த சூழலில் இந்த நிகழ்வில் பங்கேற்பதற்காக மதுரை ஆதீனம் மதுரையில் இருந்து சென்னை வந்து கொண்டிருந்தார். அப்போது அவரது கார் உளுந்தூர்பேட்டை அருகே வந்துகொண்டிருந்த போது மற்றொரு கார் மோதியது. இந்த விபத்தில் மதுரை ஆதீனம் எந்த காயமுமின்றி அதிஷ்டவசமாக உயிர் தப்பினார். பின்னர் விபத்துக்குள்ளான காரிலேயே மதுரை ஆதீனம் சென்னைக்கு வந்தார்.

இந்நிலையில் மதுரை ஆதீனத்தின் 293வது பீடாதிபதியான ஸ்ரீலஸ்ரீ ஹரிஹர ஸ்ரீ ஞான சம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகள், இந்த விபத்து திட்டமிட்ட சதி என பரபரப்பு குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார்.

இதுதொடர்பாக பேசிய அவர், "நேற்று கூட ஒரு சம்பவம் நடந்து விட்டது. என்னை கொலை செய்ய சதி செய்து விட்டனர். தருமை ஆதீனம் ஆசி தான் என்னை காப்பற்றியது. மீனாட்சி சுந்தரேஸ்வரர் பெருமான் தான் என்னை காப்பாற்றினார். இன்று இந்த இடத்திலே நிப்பேனா என்ற அளவுக்கு நேற்று ஆகிவிட்டது. அவ்வளவு தூரம் நடந்து விட்டது. நல்ல காரியத்தை பேச முடியவில்லை ஐயா.

புத்தர் ஆட்சி காலம் பொற்காலம் என்பார்கள், நான் பார்த்ததில்லை. ஆனால் எங்கள் தம்புரான் ஆதீனத்தின் காலம் பொற்காலம் தான். பாஜகவில் தேசபக்தி மிக்கவர்கள் உள்ளனர். எத்தனையோ பேர் ஆண்டாலும், சிறந்த ஆளுமையாக இருப்பவர் பிரதமர் மோடி தான். கவர்னர் ஆர்.என்.ரவி மிகவும் துணிச்சலானவர்

கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமை தேவாலயம் செல்கின்றனர். இஸ்லாமியர்கள் வெள்ளிக்கிழமை தொழுகை செய்கின்றனர். இந்துக்கள் சுண்டல் தருகிறார்கள் என கேட்கின்றனர்" என்று அவர் கூறினார்.

# சென்னையில் மகளிர் விடியல் பயணத் திட்டத்தில் 132.91 கோடி முறை பெண்கள் பயணம்




சென்னை, மே.4

மகளிர் விடியல் பயணத் திட்டம் அறிமுகமானதில் இருந்து தற்போது வரை சென்னையில் மட்டும் சுமார் 132.91 கோடி முறை பெண்கள் பயணம் மேற்கொண்டுள்ளனர் என சென்னை மாநகர போக்குவரத்துக் கழகம் தெரிவித்துள்ளது.

தமிழக அரசு, பெண்களின் நலனுக்காக பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அதில் மிக முக்கிய திட்டமாக, மகளிர் விடியல் பயணத் திட்டத்தின் கீழ் அரசு மாநகர பேருந்துகளில் மகளிர் கட்டணமின்றி பயணித்து வருகின்றனர்.

சமூக, பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கும் மற்றும் உயர்த்தும் நோக்கில் 2021ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இந்தத் திட்டத்துக்கு தமிழக பெண்களிடம் பெரும் வரவேற்பு கிடைத்துள்ள நிலையில், இந்தப் பேருந்துகளில் பயணிக்கும் பெண் பயணிகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

பெண் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், சென்னை மாநகருக்குட்பட்ட பகுதிகளில் மகளிர் விடியல் பயணத்திட்டத்தின் கீழ் இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கையை மாநகர போக்குவரத்துக் கழகம் உயர்த்தி உள்ளது.

இந்த நிலையில், மகளிர் விடியல் பயணத் திட்டத்தின் கீழ், திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட நாள் முதல் தற்போது வரை சென்னை மாநகர விடியல் பயண பேருந்துகளில் சுமார் 132.91 கோடி முறை பெண்கள் பயணம் மேற்கொண்டுள்ளனர். கடந்த ஏப்ரல் மாதத்தில் மட்டும் 3.65 கோடி முறை பயணம் மேற்கொண்டுள்ளனர்.

மகளிர் விடியல் பயணத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்ட முதல் இதுவரை ஒரே நாளில் அதிகபட்சமாக கடந்த ஏப்ரல் 28ம் தேதி 13.59 லட்சம் பயணிகள் பயணம் மேற்கொண்டுள்ளனர். இது கடந்த 2024ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பயணம் மேற்கொண்ட பயணிகளை விட 23 சதவீதம் அதிகமாகும்.

தினகனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
4.5.2025

# உடலுறவின்போது மனைவி இறந்ததாக கதறி அழுத ஜிம் மாஸ்டர்... கடைசியில் திடீர் டுவிஸ்ட்



கிருஷ்ணகிரி, மே.4

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் அடுத்த ஜூஜூவாடி அருகே தனியார் லேஅவுட் குடியிருப்பு பகுதியில் வசித்து வந்த காட்பாடி பகுதியைச் சேர்ந்தவர் பாஸ்கர் (வயது 34) ராணிப்பேட்டை பகுதியைச் சேர்ந்த அருள் என்பவருடைய மகள் சசிகலா (வயது 33). இருவருக்கும் சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது. இவர்களுக்கு 2 குழந்தைகள் உள்ளனர். இந்த நிலையில் பாஸ்கர் ஒசூர் பகுதிகளில் நான்கு இடங்களில் ஆண், பெண் என இருபாலருக்கும் உடற்பயிற்சி மையம் (ஜிம்) நடத்தி வருகிறார். இவருடைய மனைவியும் ஜிம் மாஸ்டராக பயிற்சி நிலையத்தில் பயிற்சி நடத்தி வந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் உடற்பயிற்சி மையத்திற்கு வந்த வேறு ஒரு பெண்ணுடன் பாஸ்கருக்கு பழக்கம் ஏற்பட்டு நாளடைவில் கள்ளக்காதலாக மாறியது. இருவரும் அவ்வபோது வெளியூர் சென்று உல்லாசமாக இருந்து வந்ததாக கூறப்படுகிறது.

இந்த விவகாரம் பாஸ்கர் மனைவிக்கு தெரிய வந்தது. இதன் காரணமாக பாஸ்கருக்கும், மனைவி சசிகலாவுக்கும் அடிக்கடி குடும்ப சண்டை நடந்து வந்துள்ளது.

இது தொடர்பாக இரு குடும்பத்தினரும் அவ்வப்போது தம்பதியை சமாதானம் செய்து வைத்துள்ளனர். இந்த நிலையில் நேற்று முன் தினம் இரவு குடும்பத்தகராறில் சசிகலா இறந்து விட்டதாக அவருடைய கணவர் சிப்காட் போலீசில் புகார் அளித்துள்ளார்.

போலீசார் முதற்கட்ட விசாரணையில் தற்கொலை என பதிவு செய்து உடலை பிரேத பரிசோதனைக்கு ஒசூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த நிலையில் பெண்ணின் குடும்பத்தினர் சாவில் சந்தேகம் இருப்பதாக போலீசாரிடம் தெரிவித்ததன் அடிப்படையில், பாஸ்கரிடம் போலீசார் கிடுக்குப்பிடி விசாரணையை மேற்கொண்டனர். அப்போது போலீசாரிடம் தானும் மனைவியும் இரவில் அதிக நேரம் உல்லாசமாக இருந்ததால் திடீரென மூச்சு திணறி இறந்து விட்டதாக ஜிம் மாஸ்டர் கதறி அழுதார். பின்னர் போலீசாரின் தொடர் விசாரணையில்,

கடைசியில் திடீர் டுவிஸ்ட் இருந்தது. மனைவியை துணியால் கழுத்து இறுக்கி கொலை செய்ததாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்ததாக போலீசார் தரப்பில் கூறப்படுகிறது. இதை அடுத்து சசிகலா உடல் உடற்கூறு ஆய்விற்கு கிருஷ்ணகிரி மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

மனைவியை கொலை செய்துவிட்டு நாடகமாடிய ஜிம் மாஸ்டர் கைது செய்யப்பட்ட சம்பவம் ஒசூர் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ஜிஎஸ்டி வரி மோடி தனியாக மக்களுக்கு வரி விதிப்பது போல் பேசப்படுகிறது: நிர்மலா சீதாராமன்



சென்னை, மே.4

சென்னையில் மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

ஜிஎஸ்டியால் நடுத்தர மக்கள் பாதிப்பு என்பது தவறு. முன்பு இருந்த வரியே தற்போது ஜிஎஸ்டியிலும் உள்ளது. ஜிஎஸ்டி வரி மோடி தனியாக மக்களுக்கு வரி விதிப்பது போல் பேசப்படுகிறது. ஜிஎஸ்டிக்கு பிறகு தான் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் தினமும் பயன்படுத்தும் பொருள் மீது வரி விதிக்கப்படுகிறது என கூறுவது தவறு. ஜிஎஸ்டி.,க்கு முன்பு இருந்ததை விட தற்போது வரி குறைந்துள்ளது.

ஒவ்வொரு மாநில நிதி அமைச்சர்கள் ஜிஎஸ்டி கவுன்சிலில் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். அனைவருடைய கருத்துக்கள் அடிப்படையில் தான் முடிவுகள் எடுக்கப்படுகின்றன. ஜிஎஸ்டி விவகாரத்தில் என்னால் தன்னிச்சையாக முடிவு எடுக்க முடியாது. மற்ற மாநிலங்களில் இல்லாத சாதி கொடுமை தமிழ்நாட்டில் நடைபெறுகிறது. சாதி ரீதியான பிரச்சினை தமிழகத்தில் இன்றும் உள்ளது. தமிழ்நாட்டில் அரசு சமத்துவத்தை நிலை நாட்ட வேண்டும். சாதி வாரி கணக்கெடுப்பு திமுகவின் வெற்றி என்று கூறுவது அரசியல் ஆதாயம் தேடும் முயற்சி.

இவ்வாறு அவர் கூறினார்.

மேலும் மண்டல் கமிஷன் பரிந்துரைகள் நடைமுறை செய்யப்பட்ட பிறகுதான் தமிழ்நாட்டில் இருந்து இன்னும் சில பிரிவு மாணவர்களுக்கு குடிமைப் பணிகளில் வாய்ப்பு கிடைத்தது. 1950 முதல் 2011 வரை தமிழ்நாட்டில் இருந்து சுமார் 600 பேர்தான் ஐ.ஏ.எஸ். பணிக்கு தேர்வாகி இருந்தனர். ஆனால், 2011 முதல் தற்போது வரை 900க்கும் மேல் தேர்வாகியுள்ளனர். இந்த எண்ணிக்கை எப்போதும் உயர்ந்து கொண்டுதான் உள்ளது, குறைந்ததில்லை. ஆனால், இது போதாது. இளைஞர்கள் இன்னும் நிறைய பேர் குடிமைப் பணியில் சேர முயற்சிக்க வேண்டும். தமிழ்நாட்டில்இருந்துஐ.ஏ.எஸ். பணிக்கு தேர்ச்சி பெறுவோர் எண்ணிக்கை உயர்ந்து வருவது குறித்த கேள்விக்கு மத்திய நிதிமந்திரி நிர்மலா சீதாராமன் பதில் அளித்தார்.

# திருநெல்வேலியில் கடந்த 5 ஆண்டுகளில் கொலை சம்பவங்கள் குறைந்துள்ளன: மாவட்ட காவல்துறை தகவல்

திருநெல்வேலி, மே.4

திருநெல்வேலி மாவட்ட காவல்துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

திருநெல்வேலி மாவட்டம் மற்றும் மாநகரில் காவல் துறையினர் மேற்கொண்ட கடுமையான நடவடிக்கைகளின் காரணமாக கடந்த 5 ஆண்டுகளில் கொலை சம்பவங்கள் வெகுவாக குறைந்துள்ளன.

திருநெல்வேலி மாநகரம் மற்றும் மாவட்டத்தில் பல்வேறு கட்ட நடவடிக்கைகள் எடுத்ததின் விளைவாக சமூக விரோதிகள் மற்றும் ரவுடிகளின் நடமாட்டங்கள் முற்றிலுமாக கட்டுப்படுத்தப்பட்டு, பொதுமக்கள் அமைதியாக வாழ்ந்து வருகிறார்கள். சட்டம் ஒழுங்கு சீராக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்களை அச்சுறுத்தும் எந்த சமூக விரோதிகளாக இருந்தாலும் அவர்களது நடவடிக்கைகளை தீவிரமாக கண்காணித்து உரிய நடவடிக்கை எடுத்து கட்டுப்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த 4 மாதத்தில் திருநெல்வேலிபுறநகர்மாவட்டத்தில் 12 கொலை வழக்குகள் பதிவாகியுள்ளன. கடந்த ஆண்டும் (2024) அதற்கு முந்தைய ஆண்டும் (2023) இதே காலக்கட்டத்தில் தலா 11 கொலைகளும், 2022ம் ஆண்டில் 15 கொலைகளும் நடைபெற்றுள்ளன. இவற்றை ஒப்பிடும் போது, முதல் நான்கு மாதத்தில் நடைபெற்ற கொலை வழக்குகளில் பெரிய வித்தியாசம் எதுவுமில்லை.2022ம்ஆண்டை ஒப்பிடும் போது, 3 வழக்குகள் குறைவாகும்.

அதே போன்று, கடந்த 2023ம் ஆண்டு மொத்தம் 44 கொலைகளும், 2024ம் ஆண்டு 35 கொலைகளும் நடந்துள்ளது. இது கடந்த 2023ம் ஆண்டை ஒப்பிடும்போது 20 சதவீதம் குறைவாகும். மேலும் 2021ம் வருடம் 52 கொலை வழக்குகளும் 2022ம்ஆண்டு44கொலை வழக்குகளும் பதிவாகியுள்ளன. எனவே மேற்கண்ட புள்ளிவிபரத்தின் அடிப்படையில் திருநெல்வேலி புறநகர் மாவட்டத்தில் கொலைகள் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டு, சட்டம் ஒழுங்கு சிறப்பான முறையில் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது.

கடந்த நான்கு மாதத்தில் எந்தவித பழிவாங்கும் கொலைகளோ, சாதி ரீதியான அல்லது ரவுடிகள் கொலையோ நடைபெறவில்லை. அற்ப காரணங்களுக்காகவே இந்த 12 கொலைகளும் நடந்துள்ளன. வாய்தகராறு மற்றும் சிறு தகராறின் காரணமாக 5 கொலையும், முறையற்ற மற்றும்தகாத தொடர்பின் காரணமாக 2 கொலைகளும், பணம் கொடுக்கல், வாங்கல் சம்பந்தமாக 2 கொலைகளும், சொத்து சம்பந்தமாக 2 கொலைகளும், குடும்ப பிரச்சினையின் காரணமாக மகன் தகப்பனை கொலை செய்ததாக 1 கொலையும் நடைபெற்றுள்ளன. இந்த கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட அனைத்து எதிரிகளும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவை அனைத்துமே எதிர்பாராமல் நடந்த கொலைகளாகும். இவற்றில் 1 கொலை வழக்கு மட்டும் குடிகாரர்களுக்கிடையில் மதுவை பகிர்ந்து கொள்வது சம்பந்தமாக ஏற்பட்ட வாய்தகராறினால் நடந்ததாகும்.





அதே போன்று திருநெல்வேலி மாநகரில் கடந்த 4 மாதத்தில் 6 கொலை வழக்குகள் பதிவாகியுள்ளன. அதில் குடும்ப பிரச்சினையின் காரணமாக 2 கொலைகளும், தகாத உறவின் காரணமாக 2 கொலைகளும், சொத்து பிரச்சினை மற்றும் வாய் தகராறு காரணமாக தலா ஒரு கொலையும் நடந்துள்ளது.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் காவல் துறையினர் பல்வேறு கட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாக காவல் துறையினர் எப்போதும் அன்றாட வாழ்வில் அருகிலேயே இருக்கிறார்கள் என்ற உணர்வை ஏற்படுத்தும் விதமாக, கடந்த இரண்டு ஆண்டில் மட்டும் காவல் அதிகாரிகள் மற்றும் காவலர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் 24,265 நடைரோந்துகள் செய்து மக்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளனர். மேலும் பொதுமக்கள் காவல் துறையினரை எளிதில் அணுகும் வகையில் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு காவலரை நியமித்து "கிராமத்துக் காவல்" என்ற புதிய திட்டத்தை திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் செயல்படுத்தப்பட்டு வரப்படுகிறது. இக்கிராமத்திற்கு ஒதுக்கப்பட்ட காவலர்வாரத்தில்இரண்டு நாட்கள் அக்கிராம மக்களை நேரில் சந்தித்து பொதுமக்களிடமிருந்து தகவல்கள் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு பொதுமக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது.

மேலும், காவல் துறையினர்16,233பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பொது மக்களிடம் நடத்தியுள்ளனர். குற்றத்தடுப்பு மற்றும் குற்றத்தை கண்டுபிடிக்கத்தக்க வகையில் திருநெல்வேலி மாவட்டம் முழுவதிலும் புதிதாக 7,077 கண்காணிப்பு கேமரா நிறுவப்பட்டுள்ளது. ஆன்லைன் புகார் மற்றும் காவல் நிலையத்தில் பெறப்படும் அனைத்து மனுக்களும் பதிவு செய்யப்பட்டு, உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வரப்படுகிறது. ரவுடிகள் கணக்கெடுக்கப்பட்டு ஒவ்வொரு ரவுடிக்கும் ஒரு காவலர் என்ற விகிதத்தில் நியமிக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வரப்படுகிறது.

இந்த வருடத்தில் மொத்தம் 12 கொலை வழக்குகளில் சம்பந்தப்பட்ட 44 எதிரிகளுக்கு ஆயுள்தண்டனை பெற்று தரப்பட்டுள்ளது அதில் ஒருவருக்கு மரண தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

"பாசக்கார பூமியில் நடந்த பயங்கர சம்பவங்கள் நெல்லையில் 4 மாதத்தில் 19 படுகொலைகள், மாநகரில் 7 பேரும், புறநகரில் 12 பேரும் பலி" என்ற செய்தி 1.5.2025ம் தேதி வெளிவந்த தினசரி நாளிதழில் வெளியிடப்பட்டுள்ளது. வழக்கமாக நடைபெற்ற நிகழ்வுகளை மிகைப்படுத்தி பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் தவறாக பரபரப்பான செய்தியாக நாளிதழில் குறிப்பிட்டுள்ளது போன்று, திருநெல்வேலி மாவட்டம் எவ்வித பதட்டமுமில்லாமல் அமைதியாக உள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# விராட் கோலியின் பயோபிக்கில் நடிக்கிறாரா சிம்பு?

ஐபிஎல் தொடரில் பெங்களூரு அணியின் நட்சத்திர வீரரான விராட் கோலி, சமீபத்தில் தனக்கு மிகவும் பிடித்த பாடல் என்று சிம்பு நடிப்பில் வெளியான 'பத்து தல' படத்தில் இடம்பெற்ற "நீ சிங்கம் தான்" என்ற பாடலை கூறியிருந்தார்.

இதனை பார்த்த நடிகர் சிம்பு அதனை தன்னுடைய எக்ஸ் தளத்தில் ஷேர் செய்து விராட் கோலியை டேக் செய்து நீ சிங்கம் தான்.. என்று நெகிழ்ந்து பதிவிட்டார்.

இது இரு நட்சத்திரங்களின் ரசிகர்களையும் உற்சாகப்படுத்தியது. இந்நிலையில், விராட் கோலியின் பயோபிக்கில் சிம்பு நடிக்க இருப்பதாக இணையத்தில் தகவல் பரவி வருகிறது. இது பற்றி அதிகாரபூர்வமாக எதுவும் வெளியாகவில்லை என்றாலும் இந்த தகவல் ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

# சினிமா நட்சத்திரங்களின் வாழ்க்கை மிகவும் தனிமையானது கமல்ஹாசன்



36 வருடங்களுக்குப் பிறகு கமல்ஹாசன் மணிரத்னம் கூட்டணியில் உருவாகியுள்ள படம் 'தக் லைப்'. இப்படத்தில் நடிகர் சிம்பு, திரிஷா, ஜோஜு ஜார்ஜ், ஐஸ்வர்யா லட்சுமி, கவுதம் கார்த்திக் மற்றும் பாலிவுட் நடிகர் அலி பசல் உள்ளிட்டோர் முக்கிய காதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்திருக்கும் இப்படத்தைராஜ்கமல்பிலிம்ஸ்இன்டர்நேஷனல்,மெட்ராஸ் டாக்கீஸ், ரெட் ஜெயன்ட் மூவிஸ் இணைந்து தயாரித்துள்ளது. இப்படம் வருகிற ஜூன் 5ம் தேதி திரைக்கு வருகிறது.

இந்த படத்தின் புரமோஷன் பணிகளில் படக்குழுவினர் தற்போது ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில் நடிகர் கமல்ஹாசன், நடிகை திரிஷா, நடிகர் சிம்பு ஆகியோர் அளித்த பேட்டி ஒன்றில், 'தக் லைப்' படத்தில் பணியாற்றியது தொடர்பான அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். அப்போது கமல்ஹாசன் கூறியதாவது;

"நான் எனது அண்ணன், அப்பாவை பார்த்துதான் நடக்க கற்றுக்கொண்டேன். அதுதான் வாழ்க்கை, அதுதான் நடிப்பு. மக்களை கொஞ்சம் திரும்பி பார்த்தால் போதும், ஒவ்வொருவரிடமும் ஒரு கதாபாத்திரம் இருக்கிறது. அனைத்தையும் என்னால் செய்ய முடியுமா என்பது தெரியாது. ஆனால் அவர்களிடம் இருந்துதான் நான் கற்றுக்கொள்கிறேன். தற்போது இருக்கும் அனைத்து தகவல் தொடர்பு சாதனங்களுக்கும் நான் நன்றி சொல்ல வேண்டும். அவை இல்லாவிட்டால் எங்களுக்கு வாழ்க்கையுடன் தொடர்பு விட்டுப் போயிருக்கும். இதுபோன்ற ஊடகங்களால்தான் நான் அரசியலுக்கு சென்றேன். ஊடகங்கள் செய்யு நல்லதையும் சொல்ல வேண்டும் என்பதற்காக இதை சொல்கிறேன்.

எங்களை நட்சத்திர அந்தஸ்தில் தூக்கி வைத்து எதையும் செய்ய விடாமல் தடுத்து விடுவார்கள். சாதாரண வாழ்க்கையை இழந்தவர்கள் நாங்கள். அதனால்தான் சிலர் விசித்திரமாக நடந்து கொள்கிறார்கள். இதை 3 வயதில் இருந்து நானும், சிம்பும் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

எங்கள் மொபைல் போனில் உங்களுக்கு தெரியாமல் உங்களை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அங்கிருந்துதான் எங்களுக்கு தேவையான கதாபாத்திரங்களை நாங்கள் எடுத்துக் கொள்கிறோம்."

இவ்வாறு கமல்ஹாசன் தெரிவித்தார்.

# 'கிங்டம்' படத்தின் முதல் பாடல் வைரல்



தெலுங்கு சினிமாவில் முன்னணி நடிகரான விஜய் தேவரகொண்டாதற்போது தனது 12வது திரைப்படத்தில் நடித்துமுடித்துள்ளார். இப்படத்திற்கு 'கிங்டம்' எனப்பெயரிடப்பட்டுள்ளது. கவுதம் தின்னனுரி இயக்கியுள்ள இந்த படத்தை சித்தாரா என்டர்டெயின்மென்ட், பார்ச்சூன் போர் சினிமாஸ் ஆகிய நிறுவனங்கள் இணைந்து தயாரித்திருக்கிறது.

அனிருத் இசையமைக்கும் இப்படத்தில் பாக்யஸ்ரீ போர்ஸ்,சத்யதேவ்ஆகியோர்முக்கியகதாபாத்திரங்களில் நடித்திருக்கின்றனர். இப்படம் வருகிற 30ம் தேதி வெளியாக உள்ளது.

இந்நிலையில் இப்படத்தின் முதல் பாடலான 'ஹிருதயம்லோபலா'வெளியாகிஉள்ளது.இணையத்தில் வைரலாகும் இப்பாடலை அனிருத் ரவிச்சந்தர் மற்றும் அனுமிதா நடேசன் ஆகியோர் பாடியுள்ளனர்.

# நடிகையின் கவர்ச்சி புகைப்படத்திற்கு லைக் செய்த கோலி; ரசிகர்கள் அதிர்ச்சி

பாலிவுட்டில் ரசிகர்களால் கொண்டாடப்படும் தம்பதியாக விராட் கோலி மற்றும் அனுஷ்கா சர்மா ஜோடி உள்ளது. அவர்களுடைய பாச பிணைப்பை ரசிகர்கள் எப்போதும் பாராட்டி வருகின்றனர். கோலியின் சமூக ஊடக பதிவுகளை பார்வையிட்டு, அவற்றை லட்சக்கணக்கானோர் லைக் செய்தும் வருகின்றனர்.

இந்நிலையில், இன்ஸ்டாகிராமில் நடிகை அவ்நீத் கவுர் கவர்ச்சி புகைப்படங்களை வெளியிட்டு உள்ளார். பச்சை நிறத்தில் கவர்ச்சியான தோற்றத்தில் மேலாடையும், அதற்கு இணையான நிறத்தில் குட்டை பாவாடையும் அணிந்தபடி அவர் காணப்பட்டார்.

அதற்கு பல ரசிகர்கள் எதிர்வினையாற்றி இருந்தனர். இதயம் எமோஜிக்களையும், அன்பை வெளிப்படுத்தும் வகையில் விமர்சனங்களையும் வெளியிட்டு இருந்தனர். இந்த நிலையில், அவ்நீத்தின் கவர்ச்சி புகைப்படங்களுக்கு கோலி லைக் தெரிவித்து உள்ளார். இதனை கவனித்த கோலி மற்றும் அனுஷ்காவின் ரசிகர்கள் அதிர்ச்சி அடைந்தனர். கோலி அவர்களே, என்ன செயல்பாடு இது ? என ரசிகர் ஒருவர் கேட்டுள்ளார். எனினும், உடனடியாக அதனை கோலி அன்லைக்கும் செய்து விட்டார். இந்த புகைப்படங்களை லைக் செய்ததற்கு எந்தவித உள்நோக்கமும் கிடையாது. என்னுடைய பதிவுகளில் வேண்டாதவற்றை நீக்கம் செய்யும்போது, தவறுதலாக லைக் ஆக பதிவாகி இருக்க கூடும்.

இதில் தேவையற்ற யூகங்களுக்கு இடமளிக்க வேண்டாம் என வேண்டுகோளாக கேட்டு கொள்கிறேன். உங்களுடைய புரிதலுக்காக நன்றி என அவர் தெரிவித்து உள்ளார்.

# சுப்மன் கில், பட்லர் அரைசதம்... ஐதராபாத்துக்கு 225 ரன்கள் இலக்கு நிர்ணயித்த குஜராத்



10 அணிகள் இடையிலான 18வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் இதுவரை 50 லீக் ஆட்டங்கள் நடந்து முடிந்துள்ளன. இந்நிலையில், இந்த தொடரில் அகமதாபாத்தில் இன்று நடைபெற்று வரும் 51வது லீக் ஆட்டத்தில் முன்னாள் சாம்பியன்களான குஜராத் டைட்டன்சும், சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணியும் ஆடி வருகின்றன.

இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற ஐதராபாத் முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. தொடர்ந்து குஜராத்தின் தொடக்க வீரர்களாக சுப்மன் கில் மற்றும் சாய் சுதர்சன் ஆகியோர் களம் இறங்கினர். இருவரும் தொடக்கம் முதலே ஐதராபாத்தின் பந்துவீச்சை அடித்து நொறுக்கினர்.

பவுண்டரி, சிக்சர் என அதிரடியாக இந்த இணை பவர்பிளேவான 6 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 82 ரன் எடுத்துள்ளது. இதில் அதிரடியாக ஆடிய சாய் சுதர்சன் 23 பந்தில் 48 ரன் எடுத்து அவுட் ஆனார். தொடர்ந்து பட்லர் களம் இறங்கினார். மறுபுறம அதிரடியாக ஆடிய கில் அரைசதம் அடித்து அசத்தினார். அவர் 38 பந்தில் 76 ரன் எடுத்து அவுட் ஆனார்.

இதையடுத்து பட்லருடன் வாஷிங்டன் சுந்தர் ஜோடி சேர்ந்தார். இதில் பட்லர் அதிரடியாக ஆடினார். அவர் 31 பந்தில் அரைசதம் அடித்தார். அவர் 64 ரன்னில் கம்மின்ஸ் பந்துவீச்சில் அவுட் ஆனார். தொடர்ந்து ஷாருக் கான் களம் இறங்கினார். மறுபுறம் வாஷிங்டன் சுந்தர் 21 ரன்னில் அவுட் ஆனார்.

இறுதியில் குஜராத் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 224 ரன்கள் எடுத்தது. குஜராத் தரப்பில் அதிகபட்சமாக சுப்மன் கில் 76 ரன் எடுத்தார். ஐதராபாத் தரப்பில் ஜெய்தேவ் உனத்கட் 3 விக்கெட், கம்மின்ஸ், ஜீஷன் அன்சாரி தலா 1 விக்கெட் வீழ்த்தினர். தொடர்ந்து 225 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குட ஐதராபாத் ஆட உள்ளது.

# டி20 கிரிக்கெட்; அதிவேக 2000 ரன்கள்... சாதனை பட்டியலில் இடம் பிடித்த சாய் சுதர்சன்



10 அணிகள் இடையிலான 18வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் இதுவரை 50 லீக் ஆட்டங்கள் நடந்து முடிந்துள்ளன. இந்நிலையில், இந்த தொடரில் அகமதாபாத்தில் இன்று நடைபெற்று வரும் 51வது லீக் ஆட்டத்தில் முன்னாள் சாம்பியன்களான குஜராத் டைட்டன்சும், சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணியும் ஆடி வருகின்றன.

இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற ஐதராபாத் முதலில் பந்துவீசுவதாகஅறிவித்தது. தொடர்ந்துகுஜராத்தின்தொடக்கவீரர்களாக சுப்மன் கில் மற்றும் சாய் சுதர்சன் ஆகியோர் களம் இறங்கினர். இருவரும் தொடக்கம் முதலே ஐதராபாத்தின் பந்துவீச்சை அடித்து நொறுக்கினர்.

பவுண்டரி, சிக்சர் என அதிரடியாக இந்த இணை பவர்பிளேவான 6 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 82 ரன் எடுத்துள்ளது. இந்த ஆட்டத்தில் அதிரடியாக ஆடி வரும் சாய் சுதர்சன் டி20 கிரிக்கெட்டில் 2000 ரன்களை கடந்தார். இதன் மூலம் அவர் மாபெரும் சாதனை பட்டியல் ஒன்றில் இடம் பிடித்துள்ளார்.

அதாவது குறைந்த இன்னிங்சில் 2000 ரன்களை கடந்த வீரர்கள் பட்டியலில் சாய் சுதர்சன் (54 இன்னிங்ஸ்) 2வது இடத்தை பிடித்துள்ளார். இந்தபட்டியலில்முதல்இடத்தில் ஷான் மார்ஷ் (53 இன்னிங்ஸ்) உள்ளார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.